மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்பழகன் அவர்கள் தங்களைப் பற்றிச் சொன்ன அந்தக் கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு நான் உத்தரவிட்டேன். அவை நீக்கப்பட்ட காரணத்தால் அதற்குப்பிறகு நீங்கள் சொன்ன பதில் அதற்குத் தேவையில்லை என்ற காரணத்தால்தான் ஒட்டுமொத்தமாக அவை நீக்கப்பெற்றன. என்ன இருந்தாலும், நடவடிக்கை குறிப்பைப் பார்த்துவிட்டு, எப்படி அதை வைத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி நான் பிறகு அறிவிக்கிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனி வருங்காலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களாக வருபவர்கள் கடந்தகால வரலாறை தெரிந்துகொள்வதற்காகவாவது இந்த நடவடிக்கைகளை தாங்கள் அவைக் குறிப்பில் இருக்கும்படி உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்பழகன் பேசியது, "இதே சட்ட அமைச்சர் ஒரு காலத்திலே இங்கே எங்களுடைய தலைவரை பேப்பர் வெயிட்டைத் தூக்கி எறிந்து, யார் வன்முறையாளர் என்பதை அவரே அடையாளம் காட்டியவர். அவர் மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டாம்" என்று அவர் சொன்னார். அதற்கு, அன்பழகன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்று அப்போது நான் குறிப்பிட்டேன். அதற்குத் தாங்கள் சொன்ன பதில், அவை முன்னவர் அவர்கள் சொன்ன பதில், "துரதிர்ஷ்டவசமான அந்த நிகழ்வு நடந்தபோது எத்தகைய அமங்கலச் சொல்லை, கெட்ட வார்த்தையை உங்கள் தலைவர் பேசினார் என்பதைக் கேட்டால், நீங்கள் தமிழ்ப் பண்புக்கே ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிடுவீர்கள் என்று கூறுகிறேன்" என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதில் ஒன்றும் தவறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அன்பழகன் பேசியதும் இருக்கட்டும். தாங்கள் சொன்னதும் இருக்கட்டும். நாட்டிற்கு உண்மைகள் தெரியட்டும்.

6. அறிவிப்புகள்

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெற இருப்பதால், மாலை 4–30 மணியளவில் சட்டமன்றப்

பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில், உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை *4–30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1–53* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் *4–30*

பேரவை மீண்டும் பிற்பகல் *4–30* மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் கூடியது.

5. மானியக் கோரிக்கைகள், 2001–02, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 12 – 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001–02* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் *12 – 1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய *12*ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.*26,48,55,000*–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *161*, திரு. சி. ஞானசேகரன்.